# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-16** **தேதி:-02.06.2010.**

## அரசின் இரட்டை நிலை

சீனக் கம்பெனிகள், BSNLநிறுவனத்திற்கு கருவிகள் தருவதற்கு மத்திய அரசு அறிவிக்கப்படாத தடையினை விதித்துள்ளது. சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள 55 லட்சம் GSM கருவிகளுக்கான டெண்டரில் எரிக்சன், நோக்கியா சீமென்ஸ் மற்றும் அல்காடெல் லூசென்ட் ஆகிய மூன்று மேற்கத்திய கம்பெனிகள் மட்டுமே பங்கேற்க முடியும் என BSNL நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த அறிவிப்பு ஹுவாய் மற்றும் ZTE ஆகிய இரண்டு சீன நிறுவனங்களை நடைமுறையில் தடைசெய்வதாகவே பொருள் தரும்.

அரசின் வழிகாட்டுதல் அடிப்படையில் தான் இந்த முடிவுகள் மேற்கொள்ளப் பட்டதாக CMD BSNL பத்திரிக்கைகளுக்கு தெரிவித்துள்ளார். சீன நிறுவனங்களை விட மேற்கத்திய நிறுவனங்களுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு நெருக்கடி மற்றும் உள்நாட்டு குழப்பங்கள் ஏற்படும் சமயங்களில் BSNL சேவைகளை மட்டுமே அரசாங்கம் நம்பி இருக்க வேண்டி இருக்கும் என தொலைத்தொடர்பு அமைச்சரகம் BSNL நிறுவனத்திற்கு 2010, மே 10ஆம் தேதி கடிதம் எழுதியுள்ளது. எனவே பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் BSNL நிறுவனம் எந்த விதமான சமரசமும் செய்து கொள்ளக்கூடாது எனவும் தெரிவித்துள்ளது.

அரசின் இந்த பார்வை சரியானது. வெளிநாட்டு நிறுவனங்கள் உளவு மென்பொருளை பயன்படுத்தி முக்கியமான புள்ளி விவரங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும். தவறான மென்பொருளை நிறுவுவதன் மூலம் ஒரு முக்கியமான சமயத்தில் சேவைகளை முடக்கச் செய்ய முடியும். ஆனால் அது சீன நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கும் பொருந்தும். பின்னர் ஏன் அரசு, சீன நிறுவங்களை மட்டும் தனிமைப் படுத்த வேண்டும். இது அரசின் பாரபட்சமான நிலையை தெளிவாக தெரிவிக்கிறது.

தொலைத்தொடர்பு துறையில் அரசு எடுக்கும் எந்த நடவடிக்கையும் நாட்டின் பாதுகாப்பை பாதித்துவிடக்கூடாது என நாம் தொடர்ந்து எச்சரித்து வந்துள்ளோம். ஆனால் அரசு, நாட்டின் பாதுகாப்பை பாதிக்கக் கூடிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தொலைத்தொடர்பில் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவிகிதத்திலிருந்து 74 சதவிகிதமாக உயர்த்தியது, BSNLன் பங்குகள் விற்பனை செய்ய முடிவெடுத்தது, BSNLஐ பலவீனப்படுத்துவது ஆகியவை அதற்கு உதாரணங்கள். அரசு இது போன்ற இரட்டை நிலைபாட்டை கடைபிடிப்பதை நிறுத்த வேண்டும்.

-ஜூன் 2010 டெலிகுருசேடர் தலையங்கத்தின் தமிழாக்கம்.